Visit QB365-SLMS - https://www.qb365.in/slms/ Complete Questions and Answers

Answers Key:

5 மதிப்பெண் வினாக்கள்

1. **1. ஆடம்ஸ்மித்தின் செல்வ இலக்கணம்:**
1. பொருளியல் என்பது செல்வத்தைப் பற்றிய ஓர் அறிவியல் என்று வரையறுத்துள்ளார்.
2. சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் தனது சுய நன்மைக்காகவும், இலாபத்தை முன்னேற்றவும் உழைக்கின்றான் என்று கூறுகிறார்.
2. நல இலக்கணம்: ஆல்ஃபிரட் மார்ஷல்:
1. பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள்சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும்.
2. பொருளியல், ஒருபுறம் செல்வத்தை பற்றியும் மறுபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது.
3. பற்றாக்குறை இலக்கணம்: இலயனல் இராபின்ஸ்:
1. பொருளியல் என்பது விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே ஆகும்.
2. மனிதர்களின் எல்லையற்ற தேவைகளை பூர்த்தி செய்யும் வளங்களின் அளிப்புகள் பற்றாக்குறையாக உள்ளன என்பதை இந்த இலக்கணம் கூறுகிறது.
4. வளர்ச்சி இலக்கணம்: சாமுவேல்சன்:
பொருளியில் என்பது "மனிதனும், சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்று வழிகளில் பயன்படக்கூய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும், எதிர்காலத்திலும் மக்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதை தெரிவு செய்யும் இயலாகும்".என வரையறை செய்கிறார்.
2. பொருளியில், நுகர்வு, உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு ஆகிய உட்பிரிவுகளைக் கொண்டுள்ளது.
1. நுகர்வு:
1. மனித விருப்பங்களை நிறைவு செய்யும் நுகர்வு, பொருளாதார நடவடிக்கைகளின் துவக்கப் புள்ளியாக விளங்குகிறது.
2. மனித விருப்பங்களின் இயல்புகளின் அடிப்படையில், நுகர்வோரின் நடத்தை குறைந்துசெல் பயன்பாடு, நுகர்வோரின் உபரி போன்ற பல விதிகள் விளக்கப்பட்டுள்ளன.
2.உற்பத்தி:
1. உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி எனப்படும்.
2. நிலம், உழைப்பு, மூலதனம், தொழில் அமைப்பு மேலும் உள்ளீடு, வெளியீடுகளுக்கிடையேயான உறவு ஆகியவையாகும்.
3. பரிமாற்றம்:
1. பரிமாற்றம் என்பது பல்வேறு அங்காடி அமைப்புகளின் மூலம் விலை தீர்மானிக்கப்படுவதோடு தொடர்புடையது.
2. உற்பத்தி செய்யப்பட்ட பண்டங்கள் நுகர்வோரின் கைகளுக்கு கிடைக்கின்றபோதுதான் பரிமாற்றம் சாத்தியமாகிறது.
4.பகிர்வு:
1. பகிர்வு என்பது உற்பத்தி காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும்.
2. பகிர்வு என்னும் பகுதி உற்பத்தி காரணிகளின் விலைகள் நிர்ணயிக்கப்படுவதை விளக்குகிறது.
3. **பொருளியலின் தன்மைகள்:**
பொருளியலின் தன்மையினை, குறிப்பிட்ட சில பொருளியல் அறிஞர்களின் பல்வேறு வரையறைகளைப் படிப்பதன் மூலம் புரிந்து கொள்ளலாம்.
1. செல்வ இலக்கணம்: ஆடம்ஸ்மித் (1723-1790):
" நாடுகளின் செல்வத்தின் இயல்பும், காரணங்களும் பற்றிய ஓர் ஆய்வு"(1776) என்ற தனது நூலில் செல்வதைப் பற்றிய ஓர் அறிவியல் என்று வரையறுத்துள்ளார்.
2. நல இலக்கணம்: ஆல்ஃபிரட் மார்ஷல் (1842-1924):
1. ஆல்ஃபிரட் மார்ஷல் தன்னுடைய பொருளியல் கோட்பாடுகள் என்னும் நூலில், பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள்சார் நலனை அடைவதில் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதும் ஆகும்.
2. பொருளியல் ஒருபுறம் செல்வத்தை பற்றியும் மறுபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது.
3. பற்றாக்குறை இலக்கணம்: இலயனல் இராபின்ஸ்:
1.இலயனல் ராபின்ஸ் "பொருளியல் அறிவியலின் தன்மையும் அதன் சிறப்பும் பற்றிய ஒரு கட்டுரை என்ற தமது நூலை 1932ல் வெளியிட்டார் ".
2. பொருளியல் என்பது "விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக் குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே "ஆகும்.
4. வளர்ச்சி இலக்கணம்: சாமுவேல்சன்:
சாமுவேல்சன், பொருளியில் என்பது "மனிதனும், சமுதாயமும் பணத்தை பயன்படுத்தியோ அல்லது பயன்படுத்தாமலோ, மாற்று வழிகளில் பயன்படக்கூய பற்றாக்குறையான வளங்களைக் கொண்டு பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து, அவற்றை தற்காலத்திலும், எதிர்காலத்திலும் மக்களுக்கிடையேயும் சமுதாயக் குழுக்களுக்கிடையேயும் நுகர்விற்காக எவ்வாறு பகிர்ந்தளிப்பது என்பதை தெரிவு செய்யும் இயலாகும்".
5. பொருளியலில் எல்லை:
1. பொருளியலின் எல்லை என்பது பொருளியலின் பாடப் பொருளாகும்.
2. பொருளியல் ஒரு கலையா அல்லது ஓர் அறிவியலா மற்றும் அறிவியலாக இருப்பின் அது இயல்புரையியலா அல்லது நெறியுரையியலா என்பதை இங்கு தெளிவுபடுத்துகிறது.
3. இது பண்டங்கள் மற்றும் பணிகளின் நுகர்வு, உற்பத்தி மற்றும் உற்பத்திக் காரணிகளுக்கான வருமானப் பகிர்வு ஆகியவைகளை ஆராய்கிறது.
6. பொருளியல் என்பது ஒரு கலை மற்றும் அறிவியல்:

1. பொருளியல், பிரச்சினைகளுக்கான காரண விளைவுகளுக்கு இடையேயுள்ள உறவுகளைப் பற்றி ஆராய்கிறது.
2. இயற்பியல், வேதியலைப் போன்றே பொருளியலும் ஓர் அறிவியல் என்று இராபின்ஸ், ஜோர்டன் மற்றும் ராபர்ட்சன் போன்றோர் கருதுகின்றனர். ஆகையால் பொருளியல் கலை மற்றும் அறிவியலாக கருதப்படுகிறது.

7. பொருளியல், இயல்புரை அறிவியல் மற்றும் நெறியுரை அறிவியல்:

இயல்புரை அறிவியல்:

1. 'உள்ளதை உள்ளவாறு' கூறுகிறத
2. பிரச்சினைகள் உண்மையின் அடிப்படையில், அதன் காரணங்களின் மூலம் ஆய்வு செய்கிறது.

நெறியுரை அறிவியல்:

1. 'எதுவாக இருக்க வேண்டும்' என்ற வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளது.
2. இங்கு முடிவுகள் உண்மையின் அடிப்படையில் அமைவதில்லை.

4. **1. உற்பத்தி வாய்ப்பு வளைகோடு:**

இரு பொருள்களை எடுத்துக்கொண்டால் அவற்றில் எதை எவ்வளவு என்ற வினாவிற்கு பதில் தரும் வகையில் வடிவியல் சாதனம் மூலம் விளக்குவதே, உற்பத்தி வாய்ப்பு வளைகோடு எனப்படும்.

2. எடுகோள்கள்:


1. காலத்தில் மாற்றல் இல்லை,
2. உற்பத்தி செய்யும் தொழில்நுட்பம் நிலையானது.
3. கொடுக்கப்பட்ட வளங்களைக் கொண்டு இரு பண்டங்களை மட்டுமே உற்பத்தி செய்ய முடியும்.|
4. உற்பத்திக் காரணிகளின் அளவும், தரமும் கொடுக்கப்பட்டுள்ளன.
5. உற்பத்தியில் குறைந்துசெல் விதி நிலவுகிறது.

3. உற்பத்தி வாய்ப்பு அட்டவணை:

1. கீழ்காணும் அட்டவணையைப் பயன்படுத்தி ஓர் உற்பத்தி வாய்ப்பு வளைகோட்டை வரையலாம்.

உற்பத்தி வாய்ப்புகள்	டன் கணக்கில் உணவு உற்பத்தியின் அளவு	மோட்டார் வாகனத்தின் உற்பத்தி எண்ணிக்கை
I	0	25
II	100	23
III	200	20
IV	300	15
V	400	8
VI	500	0

2. இந்த அட்டவணையிலிருந்து கொடுக்கப்பட்டுள்ள தொழில்நுட்பத்தில் அனைத்து வளங்களும் உணவு உற்பத்திக்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டால் அதிகபட்சம் 500 டன் உணவை உற்பத்தி செய்ய முடியும் என்பதை அறியலாம்.
3. உற்பத்தி வாய்ப்பு அட்டவணைக் கொண்டு உற்பத்தி வாய்ப்பு வளைகோடு வரையலாம்



4. வரைபட விளக்கம்:

1.X - அச்சில் உணவின் அளவும், Y- அச்சில் மோட்டார் வாகனத்தின் எண்ணிக்கையும் கட்டப்பட்டுள்ளது.
2. வெவ்வேறு ஆறு வகையான உற்பத்தி வாய்ப்புகளும் P_1,P_2,P_3,P_4,P_5 மற்றும் P_6என்ற புள்ளிகளால் குறிக்கப்பட்டுள்ளன.
3. அளிக்கப்பட்ட வளங்களையும், தொழில் நுட்பத்தையும் கொண்டு ஒரு சமுதாயமோ (அ)நிறுவனமோ உற்பத்தியைத் தேர்ந்தெடுக்க வேண்டிய வரைபாதையை உற்பத்தி வளைகோடு காட்டுகிறது.
4. உற்பத்தி வாய்ப்பு வளைகோடில் உள்ள P_7 போன்ற புள்ளியை சமுதாயத்தால் அடைய முடியும், ஆனால் அப்போது வளங்கள் முற்றிலுமாக பயன்படுத்தப்படாத நிலையில் இருக்கும்.
5. உணவு உற்பத்தியின் அளவை நிலைபெறச் செய்து மோட்டார் வாகனங்களின் உற்பத்தியை அதிகரிக்கலாம் அல்லது ஒரே சமயத்தில் இரண்டின் உற்பத்தியையும் அதிகரிக்க முடியும்.

5.உற்பத்தி வாய்ப்பு வளைகோடு மேல்நோக்கி அல்லது கீழ்நோக்கி இடம் பெயர்வதற்கான காரணங்களாவன.

1. உற்பத்தி சாதனங்களின் அளிப்பில் ஏற்படும் மாற்றம் மற்றும்,
2. தொழில் நுட்ப நிலையில் ஏற்படும் மாற்றம்.
3. வளங்களின் அளிப்பு அதிகரிப்பதாலும், தொழில்நுட்ப மேம்பாட்டினாலும், காலப்போக்கில் பொருளாதாரத்தின் உற்பத்தி ஆற்றல் அதிகரிக்கலாம்.

5. **இலக்கணம்**:

ஆல்பிரட் மார்ஷல் தன்னுடைய பொருளியல் கோட்பாடுகள் (1890) என்ற நூலில், "அரசியல் பொருளியல் என்பது மனிதனின் அன்றாட நடவடிக்கையை படிப்பதும், பொருள் சார் நலனை அடைவதின் பொருட்டு தனிமனிதன் மற்றும் சமுதாயத்தின் செயல்பாட்டை குறித்து ஆராய்வதாகும். பொருளியல் ஒரு புறம் செல்வத்தைப் பற்றியும் முக்கியமான மற்றொருபுறம் மனிதனைப் பற்றியும் ஆராய்கிறது"

சிறப்பம்சங்கள்:

(i) அனைத்து பொருளாதார நடவடிக்கைகளுக்கும் முதலும் முடிவும் செல்வமே என்று பொருளியலில் கருதப்படவில்லை. மனிதன் முதலில் நலத்தையே மேம்படுத்த முயல்கிறான். செல்வத்தையல்ல.

QB365™ Study Material
QUESTION BANK 365

(ii) சாதாரண மனிதர்கள் அன்பினால் கட்டுப்பட்டவர்களேயன்றி உச்சபட்ச பணம் பெறுவதை நோக்கிச் செல்பவர்கள் அல்லர்,
(iii) பொருளியல் ஒரு சமூக அறிவியல், சமுதாயத்தில் ஒருவர் மற்றொருவர் மீது செலுத்தும் ஆதிக்கத்தை பற்றியது.

திறனாய்வு:

(i) மார்ஷல் பொருள்சார் நலனுக்கு மட்டுமே முக்கியத்துவம் அளித்துள்ளார். பொருள்சாரா நலனை தரக்கூடிய மருத்துவர், ஆசிரியர் போன்றோரது பணிகளைக் கருத்தில் கொள்ளவில்லை. ஆனால் அவர்களது பணிகளும் மனித நலனை மேம்படுத்துகிறது.
(ii) பொருள்சாரா பணிகளுக்கு வெகுமதியாக அளிக்கப்படும் பணத்தினை பற்றி மார்ஷல் தனது கூலி கோட்பாட்டில் ஏதும் கூறவில்லை.
(iii) மக்கள் நலனை மேம்படுத்தும் மற்றும் மேம்படுத்தாத பொருட்களை பற்றி மார்ஷல் வேறுபடுத்தியுள்ளார். ஆனால் நடைமுறையில் மதுபானங்கள் மனிதநலனை மேம்படுத்துவதாக இல்லை. எனினும் விலை பெறுபவையாக உள்ளதால் அவையும் பொருளியலின் எல்லைக்குள் உட்படுத்தப்படுகிறது.
(iv) தனிமனிதனின் நலன் அல்லது நாட்டின் நலனானது அந்த நாடு கொண்டுள்ள செல்வ இருப்பை மட்டுமே சார்ந்தது அல்ல. அது அந்நாட்டின் அரசியல், சமூக மற்றும் கலாச்சார நடவடிக்கைகளை சார்ந்தது.

3 மதிப்பெண் வினாக்கள்

6. பொருளியல் என்பது "விருப்பங்களோடும் கிடைப்பருமையுள்ள மாற்று வழிகளில் பயன்படக்கூடிய பற்றாக்குறையான சாதனங்களோடும் தொடர்புடைய மனித நடவடிக்கைகளைப் பற்றி படிக்கும் ஓர் அறிவியலே "ஆகும் என இலயனல் ராபின்ஸ கூறியுள்ளார்.

ராபின்ஸ் இலக்கணத்தின் முக்கிய சிறப்புயல்புகள் :

1. மனித விருப்பங்கள் எண்ணற்றவை.
2. மனிதனின் எல்லையற்ற தேவைகளை பூர்த்தி செய்யும் வளங்களின் அளிப்பு பற்றாக் குறையாக உள்ளன.
3. பற்றாக்குறையான வளங்கள் மாற்று வழிகளில் பயன்தரக்கூடியவையாக உள்ளன.

திறனாய்வு:

1. ராபின்ஸ் மனிதர்களுக்கு நலன் தரக்கூடிய பொருட்கள் அல்லது நலன்தரா பொருட்கள் என்று தரம் பிரிக்கவில்லை.
2. அரிசியை உற்பத்தி செய்வதால் மனிதனின் நலன் மேம்படுகிறது.
3. பொருளியல் என்பது நுண்ணியப் பொருளியில் மட்டுமல்லாமல் பேரியல் பொருளாதார நிகழ்வுகளான தேசிய வருமானம் எவ்வாறு உருவாக்கப்படுகிறது என்பதையும் உள்ளடக்கியது.
4. இவ்விலக்கணமானது பொருளாதார வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் சார்ந்த கோட்பாடுகளை உள்ளடக்கவில்லை.

7. 1. உணவு உடை வீட்டுப்பொருட்கள் போன்றவற்றை அதிகம் உற்பத்தி செய்வதா? அல்லது ஆடம்பர பண்டங்களை அதிகம் உற்பத்தி செய்வதா?
   2. விவசாயப் பொருட்களையா? அல்லது தொழிற்சாலைப் பண்டங்களையா?
   3. வளங்களை, அதிகமாக கல்வி மற்றும் சுகாதாரத்திற்கு பயன்படுத்துவதா? அல்லது ராணுவப் பணிகளுக்கு பயன்படுத்துவதா?
   4. நுகர்பண்டங்களை அதிகம் வைத்துக்கொள்வதா?அல்லது முதலீட்டு பண்டங்களை வைத்துக்கொள்வதா?
   5. அடிப்படைக் கல்விக்கு அதிகம் செலவு செய்வதா? அல்லது உயர்கல்விக்கு அதிகம் செலவு செய்வதா?

8. பொருளாதார நடவடிக்கைகள் நுகர்வு, உற்பத்தி, பரிமாற்றம், பகிர்வு ஆகியவைகளாகும்.

நுகர்வு:

மனித விருப்பங்களை நிறைவு செய்யும் நுகர்வு, பொருளாதார நடவடிக்கைகளின் துவக்கப் புள்ளியாக விளங்குகிறது.

உற்பத்தி:

உள்ளீடுகளை வெளியீடுகளாக மாற்றும் செயல்பாடே உற்பத்தி எனப்படும்.

பரிமாற்றம்:

பரிமாற்றம் என்பது பல்வேறு அங்காடி அமைப்புகளின் மூலம் விலை தீர்மானிக்கப்படுவதோடு தொடர்புடையது.

பகிர்வு:

உற்பத்தி காரணிகளின் பங்களிப்பு மூலம் கிடைக்கும் விளைவாகும்.

9. பணிகளின் இயல்புகள் நான்கு. அவை,

1. புலனாகாப் பொருட்கள்:

1. புலனாகாப் பொருட்களுக்கு உருவ அடையாளம் இல்லை. ஆனால் மற்ற பண்புகளோடு தொடர்புடையவை
2. (எ.கா.)அடையாள குறியீடு, நிறுவன நன்மதிப்பு.

2. பலதரப்பட்ட பண்டங்கள்:

1. பணிகள் பல்வேறு இடங்கள் மற்றும் கலாச்சாரப் பின்னணியில் வேறுபடுகின்றன.
2. (எ.கா.) இசை மற்றும் மருத்துவ சேவை

3.பணிகளை உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது:

1. பணிகள் அதனை செயல்படுத்துபவருக்கே உரியவை.
2. (எ.கா.)உழைப்பாளரிடமிருந்து உழைப்பை பிரிக்க இயலாது.

4. அழியக்கூடியவை:

1. பண்டங்களை போன்று பணிகளை சேமித்து வைக்க இயலாது.
2. (எ.கா.)மட்டை பந்து விளையாட்டை காண வழங்கப்பட்ட கட்டண விலை விளையாட்டு முடிந்த பிறகு பயன்தராது.

10. 1. பயன்பாடு உளவியல் சார்ந்தது.
    2. பயன்பாடும், உபயோகமும் ஒன்றானவை அல்ல.
    3. பயன்பாடு தனித்தும், சார்ந்தும் இருக்கும்.
    4. பயன்பாடு மனித விருப்பத்தின் தீவிரத்தைச் சார்ந்தது.
    5. பயன்பாடு ஒரு உளவியல் கருத்தாகும்
    6. பயன்பாடு நீதிநெறி, ஒழுக்க நெறியில் முக்கியத்துவம் கொண்டதல்ல.
    7. பயன்பாடும் மகிழ்ச்சியும் ஒன்றானவை அல்ல.

QB Study 365 Material
QUESTION BANK 365

11.

வ.எண்	நுண்ணியல் பொருளியல்	பேரியல் பொருளியல்
1.	சிறிய அளவை ஆராய்கிறது.	பெரிய அளவை ஆராய்கிறது.
2.	தனி ஒரு பண்டத்தின் விலை, தனிப்பட்ட நிறுவனங்கள் அல்லது தொழில், குடும்பங்கள் பற்றி ஆராய்கிறது.	நாட்டின் ஒட்டுமொத்த பொருளாதாரத் செயல்பாடுகள் பற்றி முழுமையாக ஆராய்கிறது.
3.	விலைக்கோட்பாட்டின் கீழ் விளக்கப்படுகிறது.	வருமானக் கோட்பாட்டின் கீழ் விளக்கப்படுகிறது.
4.	ஆல்பிரட் மார்ஷல் நுண்ணியல் பொருளியலில் தந்தை என அழைக்கப்படுகிறார்.	J.M. கின்ஸ் பேரியல் பொருளியலில் தந்தை என அழைக்கப்படுகிறார்.

12.

வ.எண்	இயல்புரை பொருளியல்	நெறியுரை பொருளியல்
1.	இயல்புரை அறிவியல்,'உள்ளதை உள்ளவாறு' கூறுகிறது.	நெறியுரை பொருளியல் 'எதுவாக இருக்கவேண்டும்' என்ற வினாவிற்கு விடையளிப்பதாக உள்ளது.
2.	நிரூபிக்க இயலும்	நிரூபிக்க இயலாது
3.	என்ன என்பதைக் கூறுகிறது	எப்படி இருக்க வேண்டும் என உரைக்கின்றது.
4.	உண்மையின் அடிப்படையில் அமைந்தது.	உண்மைகளின் அடிப்படையில் அமைந்ததன்று.

13. 1.அனைத்து பொருளாதார நடவடிக்கைகளுக்கும் முதலும், முடிவுமாக செல்வமே என்று கருதப்படவில்லை மாறாக மனித நலத்தை மேம்படுத்த முயல்கிறான்.
2. பொருளியல் சாதாரண மனிதனின் நடத்தையைப் பற்றியதே, அவர்கள் சாதாரண அன்பினால் கட்டுப்பட்டவர்களேயன்றி,உச்ச பட்ச பணம் பெறுவதை நோக்கிச் செல்பவர்கள் அல்லர்.
3. பொருளியல் ஓர் சமூக அறிவியலாகும்.அது சமுதாயத்தில் ஒருவர் மற்றொருவர் மீது செலுத்தும் ஆதிக்கத்தைப் பற்றிய படிக்கிறது.

14. 1. ஒரு பொருளாதாரத்தின் செயல்பாட்டை அறிந்துகொள்ள உதவுகிறது.
2. பொருளாதாரக் கொள்கைக்கான கருவியைத்தருகிறது.
3. பொருளாதார நலனின் நிலையை பற்றி ஆராய்கிறது.
4. வளங்களை திறன்பட பயன்படுத்த உதவுகிறது.
5. பன்னாட்டு வாணிபத்தில் பயன்படுகிறது.
6. பயனுள்ள முடிவுகளை எடுப்பதற்கு பயன்படுகிறது.
7. வளங்களை உத்தம அளவில் பங்கிட பயன்படுகிறது.
8.முன்கணிப்பிற்கு அடிப்படையாக உள்ளது.
9. விலை நிர்ணயம் செய்ய உதவுகிறது.

15. நோபல் பரிசு பெற்ற மில்டன் ஃபிரீட்மேன் கருத்துப்படி "இலவச உணவு என்று எதுவும் இல்லை". ஒன்றை இழக்காமல் ஒன்றை பெறுவது சாத்தியமில்லை என்று கூறுகிறார். இலவசம் என்பது எப்போதும் தனிமனிதனுக்கான அல்லது சமுதாயம் முழுமைக்கான செலவாகும். இதனது செலவு உள்ளடங்கியுள்ளது. பொதுப்பண்டங்கள் இலவசமாகவும், சிலருக்கு பணம் செலுத்துவதாலும் கிடைக்கப்பெறும் இது பிறவாய்ப்புச் செலவு எனப்படுகிறது.

QB™ QUESTION BANK 365 Study Material

2 மதிப்பெண் வினாக்கள்

16. 1. ' பொருளியல் 'என்றால் இல்லங்களில் நிர்வாகம் என்று பொருள்படும்.
2. பொருளியல் என்ற சொல் ஆய்க்கனோமிக்ஸ் என்னும் பழமையான கிரேக்க சொல்லிலிருந்து வந்தது
3. ஆரம்பத்தில் அரசியல் பொருளாதாரம் என்று அழைக்கப்பட்ட இவ்வியல். பிற்பகுதியில் ' பொருளியல் ' என்று ஆல்ஃபிரட் மார்ஷலால் பெயர் மாற்றப்பட்டது.

17. 1. தனிப்பட்ட மனிதர்கள், இல்லங்கள் மற்றும் நிறுவனங்கள் அல்லது தொழில்களின் பொருளாதார நடவடிக்கைகளை நுண்ணியல் பொருளியல் என்கிறோம்.
2. பல்வேறுபட்ட சந்தை சூழலில் தொழில் நிறுவனங்கள், வாங்குபவர்கள், விற்பவர்கள் இணைந்து வெவ்வேறு விலையைத் தீர்மானிக்கும் செயலில் ஈடுபடுகிறார்கள் என்பதை நுண்ணிய பொருளியல் தெளிவுபடுத்துகிறது.

18. 1. மனித விருப்பத்தை நிறைவு செய்யும் எதுவும் பொருளியலில் பண்டங்களாக கருதப்படுகின்றன.
2. பொருளியலில் பண்டங்கள் என்பது குறிப்பிட்டு சொல்லப்படாதவரை, பணிகளையும் சேர்த்தே "பண்டங்கள் "என்ற சொல் குறிக்கும்.

19.

வ. எண்	பண்டங்கள்	பணிகள்
1.	பண்டங்கள் உற்பத்தி செய்யப்படும்.	பண்டங்களோடு சேர்த்து பணிகளும் உற்பத்தி செய்யப்பட்டு நுகரப்படுகின்றன.
2.	பண்டங்களுக்கு உருவ அடையாளம் உண்டு	பணிகளுக்கு உருவ அடையாளம் இல்லை
3.	பண்டங்கள் உரிமையாளரிடமிருந்து தனித்துக் காணப்படும்.	பணிகளை உருவாக்குபவரிடமிருந்து பிரிக்க இயலாது.

20. 1. வடிவப் பயன்பாடு
2. காலப் பயன்பாடு

21. 1. இயல்புரை அறிவியல், உள்ளதை உள்ளவாறு கூறுகிறது.
2. நிரூபிக்க இயலும்
3. காரண காரியங்களை தொடர்புபடுத்துகிறது.
4. உண்மையின் அடிப்படையில் அமைந்தது
5. வெளிப்படையானது, என்ன என்பதைக் கூறுகிறது.

22. பகுத்தாய்வு முறை என்பது முழுமை தொகுதியினை பற்றிய கருத்தின் அடிப்படையில் அதன் தனி அலகு ஒன்றினைப் பற்றி கருத்துக் கூறுவதாகும்.

23.

சுகாதார பொருளாதாரம் சுகாதார குறியீடுகள், நோய் தடுப்பு மற்றும் நோய் நீக்கும் நடவடிக்கைகள், மருத்துவ ஆராய்ச்சி மற்றும் கல்வி, கிராமப்புற சுகாதார பணி, மருந்து, விலை கட்டுப்பாடு, மகப்பேறு மற்றும் குழந்தை சுகாதாரம் போன்றவற்றை உள்ளடக்கியது.

24. (i) மனித விருப்பங்களை நிறைவு செய்யும் நுகர்வு பொருளாதார நடவடிக்கையின் துவக்க புள்ளி.
(ii) மனித விருப்பங்களின் இயல்புகளின் அடிப்படையில் நுகர்வோரின் நடத்தை, குறைந்து செல் பயன்பாடு, நுகர்வோர் உபரி போன்ற விதிகள் விளக்கப்படுகின்றன.

25. மக்கள் என்ன விரும்புகிறார்கள் மற்றும் மக்கள் எதைப் பெற முடியும் ஆகிய இரண்டிற்கும் இடையே உள்ள இடைவெளி.

QB 365 Study Material
QUESTION BANK 365